இனிமையான குழந்தைகளே! நினைவின் பயிற்சியை எளிமையாக்குவதற்காக பாபாவை சில சமயம் தந்தை ரூபத்தில், சில சமயம் ஆசிரியர் ரூபத்திலும், சில சமயம் சத்குரு ரூபத்திலும் நினைவு செய்யுங்கள்

கேள்வி: குழந்தைகளாகிய நீங்கள் இப்பொழுது முழு உலகத்திலும் எந்த ஒரு தண்டோராவை கொட்ட வேண்டும்?

பதில்: சுகமான உலகத்தினைப் படைப்பவராகிய அவரே இராஜயோகத்தை கற்பிக்க வந்திருக்கிறார் என்ற தண்டோராவை இப்பொழுது அடிக்க வேண்டும். அவர் குழந்தைகளுக்காக உள்ளங்கையில் சொர்க்கத்தை கொண்டு வந்திருக்கிறார், ஆகையால் இராஜயோகத்தைக் கற்றுக் கொள்ளுங்கள். பாபா தானே கூறுகிறார்: குழந்தைகளே! இப்போது உங்களுடைய 84 பிறவிகள் முடிவடைந்து விட்டது, நீங்கள் என்னுடன் சேர்ந்து வீட்டிற்கு வரவேண்டும். ஆகையால் தேக உணர்வை விட்டு அசரீரி ஆகுங்கள். தெய்வீக குணத்தை தாரணை செய்தீர்கள் எனில் தெய்வீக உலகத்திற்குச் சென்று விடுவீர்கள்.

பாடல்: யார் வந்தது என்னுடைய மனம் என்ற வாசலில்..............

ஓம்சாந்தி இனிமையிலும் இனிமையான குழந்தைகள் பாடலைக் கேட்டீர்கள் அதாவது இப்போது நம்முடைய புத்தியில் யாருடைய நினைவு வந்துள்ளது? பதீத பாவன் ஒரே ஒரு பாபா மட்டுமே என்பது அனைவருடைய புத்தியிலும் உள்ளது. ஆங்கிலத்தில் அவரை -பரேட்டர் (விடுவிப்பவர்) என கூறுகிறார்கள். துக்கத்திலிருந்து விடுவிக்கின்றார். துக்கத்தைப் போக்குபவர், சுகம் தருபவராக இருக்கிறார், இது எந்த ஒரு மனிதன் அல்லது தேவதையின் பெயர் கிடையாது. இது ஒரே ஒரு பதீத பாவனர் பாபாவின் மகிமையாக உள்ளது. பதீத பாவனர், சத்கதி அளிக்கும் வள்ளலை இறை தந்தை என கூறுகின்றனர். மனிதர்களுக்கு இந்த மகிமை இருக்க முடியாது. லட்சுமி-நாராயணரை, பிரம்மா, விஷ்ணு, சங்கரை பதீத பாவனர் எனக் கூறமுடியாது. பதீத பாவனர் உயர்ந்ததிலும் உயர்ந்தவர் ஒருவர் தான். பரம்பிதா பரமாத்மாவின் பெயரும் உயர்வானது எனில் அவருடைய இருப்பிடமும் உயர்வானது ஆகும். உங்களுக்கு நிச்சயம் இருக்கிறது இவர் நமது தந்தையாக இருக்கிறார். சிவனைத்தான் பாபா என்கின்றனர், சிவன் தான் நிராகாரமானவர். சிவனுடைய உருவம் தனிப்பட்டது, சங்கருடைய உருவம் தனிப்பட்டதாக இருக்கிறது. அவர் (சிவன்) தந்தை, ஆசிரியர், சத்குருவாக இருக்கிறார். இன்று சத்ருவார். உங்களுக்குத் தினமும் சத்குருவாரமாக உள்ளது. சத்குரு தினமும் உங்களுக்கு கற்பிக் கின்றார். மேலும் அவர் உங்களுடைய தந்தையாக இருக்கின்றார். இது நிச்சயத்தில் இருக்க வேண்டும் அல்லவா? அவரை சர்வவியாபி என கூறுவதில்லை. உங்களுடைய புத்தியில் உள்ளது - பதீத பாவனர் பரமபிதா பரமாத்மா நமக்கு இராஜயோகத்தைக் கற்பிக்கின்றார், அவர் ஞானக்கடலாக உள்ளார். இது புத்தியில் நிச்சயமாக இருக்க வேண்டும். இவர் ஒருவர் தான் தந்தை, அவரை எந்த ரூபத்தில் வேண்டு மானாலும் நினைவு (சூட்சம சரீரத்துடன்) செய்யுங்கள். புத்தியானது மேலே நிராகாரமானவரின் பக்கம் சென்று விடுகின்றது. இவர் ஆகார மானவரோ அல்லது சாகாரமானவரோ (ஸ்தூல சரீரமானவரோ) அல்ல. ஆத்மாக்களுக்கு பரமபிதா பரமாத்மாவுடன் இப்போது காரியம் உள்ளது ஆனால் தெரிந்திருக்க வில்லை. பாடுகின்றனர் அவர் ஞானக்கடல் என்று. ஆனால்

ஞானக்கடல் என்றால் ஞானத்தை சொல்லி சத்கதி அளிப்பவர். லட்சுமி-நாராயணருக்கு இந்த ஞானம் இருப்பதில்லை. ஞானம் என்பது ஞானக்கடலிடமிருந்து கிடைப்பது, ஆகையால் சாஸ்திரத்தில் கூட ஞானம் இருப்பதில்லை. ஞானக் கடலைத் தான் மனித சிருஷ்டியின் விதை ரூபம் என கூறப்படுகிறது. பாபா படைப்பவராக உள்ளார். அவர் எல்லையற்ற தந்தை மேலும் மற்ற அனைவரும் எல்லைக்குட்பட்ட தந்தையாவார்கள். இப்போது எல்லைக்கப் பாற்பட்ட தந்தையை அனைவரும் நினைவு செய்கின்றனர், அவர் தந்தைக்கு எல்லாம் தந்தை, பதிகளுக்கெல்லாம் பதி, குருவுக்கெல்லாம் கூட குருவாக இருக்கின்றார். அனை வரும் அவரை நினைவு செய்கின்றார்கள், சாதனை செய்கிறார்கள். இன்றைய நாட்களில் சித்திரங் களுக்கு எதிரில், இராமருக்கு எதிரில், சங்கரருக்கு எதிரில் லிங்கம் வைக்கின்றனர். அவர் நிராகார மானவர், உயர்ந்ததிலும் உயர்ந்தவர், அவரே விடுவிக்கவும் செய்கிறார். இப்போது அனைத்து ஆத்மாக்களும் தூய்மை இல்லாதவர்களாக உள்ளனர். 5000 வருடத்திற்கு முன்பு எப்போது ஆதிசனாதன தேவி தேவதாவின் இராஜ்யம் இருந்தது எனில் அந்த சமயம் ஒரு இராஜ்யம் மட்டுமே இருந்தது, சுகதாமமாக இருந்தது. தூய்மை, சுகம், சாந்தி அனைத்தும் இருந்தது. அதனுடைய பெயர் தான் சொர்க்கம். சொர்க்கத்தை சூட்சும வதனம் அல்லது மூலவதனம் என கூறுவதில்லை. சொர்க்கத்திற்கு எதிர்மாறானது தான் நரகம். இது புத்தியில் வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு எல்லைக்கப்பாற்பட்ட தந்தையையே நினைவு செய்ய வேண்டும், அவரிடமிருந்து சொர்க்கத்தின் ஆஸ்தி கிடைக்கிறது. சத்குரு இராஜயோகத்தை கற்பிக்கின்றார் பாவன உலகத்திற்கு அழைத்துச் செல்கின்றார்.அந்த ஒருவருக்குத் தான் எவ்வளவு மகிமை உள்ளது. லட்சுமி-நாராயணருக்கு இந்த மகிமையைக் கூறமுடியாது. ஒருவர் மட்டுமே தான் நிராகாரமான தந்தையாக உள்ளார். எப்போது சரீரத்திலிருந்து பிரிந்து விடும்போது ஆத்மாவும் கூட நிராகாரமாக உள்ளது, பாபா கூறுகின்றார் நீங்கள் உங்களது சரீரத்தை தரித்துக் கொண்டு நடிப்பை நடிக்கிறீர்கள். நீங்கள் எவ்வளவு பிறவி நடிக்கிறீர்கள் என்பதைக் கூட தெரிந்திருக்கிறீர்கள். பிரம்மாவிற்கும் கூட சரீரம் உள்ளது. சூட்சும வதனத்தில் கூட சரீரம் உள்ளது. சரீரம் இருக்கிறது அல்லவா? பிரம்மா-விஷ்ணு-சங்கருக்கும் கூட சூட்சும சரீரம் இருக்கிறது. நீங்கள் என்னை நிராகாரம் என கூறுகிறீர்கள். குழந்தைகளுக்குப் புரிய வைக்கப்பட்டுள்ளது. உங்களுக்கு இரண்டு தந்தை இருக்கிறார்கள், உங்களுடைய தந்தைக்கும் கூட இரண்டு தந்தை இருக்கிறார்கள் என்று யாருக்கு வேண்டுமானாலும் கூறுங்கள். அனைவரும் அந்த எல்லையற்ற தந்தையையே நினைவு செய்கின்றனர். லௌகீக தந்தை அனேகர், ஆனால் எல்லைக்கப்பாற்பட்ட தந்தை ஒருவர் மட்டுமே. தந்தை என்பது மறந்து விட்டால் ஆசிரியர் நினைவு வரட்டும், ஆசிரியர் என்பது மறந்து விட்டால் சத்குரு நினைவில் வரட்டும்.

இந்த எல்லையற்ற தந்தை புரிய வைக்கின்றார் - பாரதம் இப்பொழுது தூய்மையின்றி உள்ளது. முதலில் தூய்மையாக இருந்தது எனில் இவ்வளவு ஆத்மாக்கள் எங்கே வசித்திருப்பார்கள்? முக்திதாம், வானப்பிரஸ்த நிலையில் அதாவது சப்தத்தை கடந்து. மனிதர்கள் வயதாகி விட்டால் சப்தத்தை கடந்து செல்வதற்காக குருவின் அடைக்கலம் அடைந்து கேட்கிறார்கள். எங்களை நிர்வாண் தாமத்திற்கு அழைத்துச் சேர்த்துவிடுங்கள் என்று. ஆனால் அவர்களால் சென்றடைய முடிவதில்லை. மரம் கூட வளரவேண்டுமல்லவா?

முக்கியமான பாகமே பாரதத்தினுடைய தாகும். அதில் கூட யார் ஆதிசனாதன தேவி தேவதா தர்மத்தினரோ அவர்கள் தான் 84 பிறவிகள் எடுக்கின்றனர். ஆத்மா பரமாத்மா பிரிந்திருந்து வெகு காலம் ஆகிவிட்டது... என்றால் கணக்கு இருக்க வேண்டுமல்லவா? நீண்ட காலம் என்றால் யார் முதல் முதலாக இந்த சிருஷ்டியில் நடிப்பை நடிக்க வருகிறார்களோ அவர்கள் தான் உண்மையில் அவர்களுக்குத்தான் 84 பிறவிகள். 84 பிறவியின் சக்கரம் என்று தான் சொல்லப்படுகின்றது, 84 லட்சம் பிறவிகளின் சக்கரம் என சொல்லப்படுவதில்லை. குழந்தைகளான உங்களுக்கு 84 பிறவியின் சக்கரம் புரிய வைக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்பு தெரிந்திருக்கவில்லை. இவரிடம் (பிரம்மா) கேட்டால் கூட இவருடைய ஆத்மாவும் அறிந்திருக்கிறது அல்லவா? இரண்டு ஆத்மாக்களைப் பற்றிக் கூட ரகசியம் புரிய வைக்கப்பட்டுள்ளது. மற்றொரு ஆத்மா பிரவேசிக்க முடியும். அசுத்த ஆத்மாவின் பிரவேசம் கூட ஏற்பட முடியுமல்லவா? அப்படியெனில், பரமபிதா பரமாத்மாவும் கூட வர முடியும். மற்றபடி கூறுகிறார் நான் நிராகாரம், வரவில்லை என்றால் இராஜயோகத்தை எப்படி கற்பிப்பேன்? என்னைத்தான் ஞானக்கடல் என்கிறார்கள், மனிதர்கள் சொர்க்கத்தை ஸ்தாபனை செய்ய முடியாதல்லவா? பாபாவைத்தான் சொர்க்கத்தை படைப்பவர் என சொல்லப்படுகிறது. வைகுண்டமானது இராஜ்யமாக இருக்கிறது. ஒருவர் மட்டும் இருப்பதில்லை. ஸ்ரீ கிருஷ்ணர் தான் நம்பர் ஒன் இளவரசன், சதோபிரதானம். சதோபிரதானத்தை தான் மகாத்மா என சொல்லப்படுகின்றது. தனியாக இருப்பவர்களை குமார்-குமாரி என சொல்லப் படுகிறது. குமாரிக்கு அதிக புகழ் இருக்கிறது. திருமணம் ஆன பின்பும் கூட தூய்மையாக இருக்கிறார்கள், இருந்த போதிலும் யுகல் (ஜோடிகள்) என கூறுகிறார்கள் அல்லவா? பிறகு குமாரியின் பெயர் மாறிவிடுகிறது. தாய்-தந்தையாகி விடுகிறார்கள். குழந்தை பிறந்த பின்பு தாய்-தந்தை என சொல்லப்படும். திருமணத்திற்கு பின்பு புரிந்துக் கொள்வார்கள் இவர்கள் தாய்-தந்தையாக இருக்கிறார்கள், புரிந்துக் கொள்ளலாம், குழந்தைகளும் இருப்பார்கள். அவர்களை குமார்-குமாரி என சொல்ல முடியாது.

குழந்தைகள் தெரிந்திருக்கிறீர்கள் இப்போது கிருஷ்ணபுரி ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கின்றது. அங்கு ஒரே ஒரு தேவி-தேவதா தர்மம் உள்ளது. மற்றபடி ஒவ்வொரு தர்மத்தின் சாஸ்திரம் கூட தனித்தனியாக இருக்கும். இதனுடைய தர்ம சாஸ்திரம் இது தான் என்று சொல்லப்படுகின்றது. நாங்கள் இந்த தர்மம் அதாவது மடத்திற்கு செல்கின்றோம், ஆத்மாக்கள் வந்து தனது பாகத்தை நடிக்க வேண்டும். யாரிடமாவது கேளுங்கள் - குருநானக் இனி எப்பொழுது வருவார்? அவர்கள் கூறி விடுவார்கள் ஜோதி ஜோதியோடு கலந்து விட்டது என்று. அப்படியெனில் அவர் மீண்டும் வர வேண்டியதில்லையா என்ன? சிருஷ்டி சக்கரம் எப்படி சுழல முடியும்? குரு நானக்கின் ஆத்மா எப்பொழுது வந்ததோ அவருக்கு பின்னால் சீக்கிய தர்மத்தினர் வந்து செல் கின்றனர். இப்போது பாருங்கள் எத்தனை பேர் ஆகிவிட்டனர். மீண்டும் கூட சக்கரம் சுழலும் அல்லவா? கூறுங்கள் அவர் மீண்டும் எப்போது வருகிறார்? என்றால் கூறமுடிவதில்லை. நீங்கள் கூறுகிறீர்கள் இது 5000 வருடத்தின் சக்கரமாக உள்ளது. குருநானக்கிற்கு 500 வருடங்கள் ஆனது, பிறகு 4500 வருடத்திற்குப் பின்பு வந்து சீக்கிய தர்மம் ஸ்தாபனை செய்வார். நாம் ஆதிசனாதன தேவி தேவதா தர்மத்தை ஸ்தாபனை செய் கின்றோம். பிறகு மற்றவர்களும் கூட வரிசைக்கிரமமாக வந்து தர்மத்தை ஸ்தாபனை செய்வார்கள். ஒருசில

குழந்தைகள் கூறுகின்றனர் எங்களுடைய புத்தியில் அந்த அளவு நிலைப்பதில்லை. நல்லது, கொஞ்சம் விசயம் நிலைக்கிறது அல்லவா? பக்தர்களின் பகவானாக பாபா ஒருவரே இருக்கிறார். சொல்லப்படுகிறது பாவ ஆத்மா, புண்ணிய ஆத்மா. பரமாத்மா என யாரையும் சொல்ல முடியாது. ஆத்மா வந்து பரமாத்மாவாக ஆகிவிடும் என்பதல்ல. எப்படி எடுத்துக் காட்டு தருகிறார்கள் - நீர் குமிழ் கடலிலேயே கலந்து போய் விடுகிறது அல்லவா அதுபோல என்பர். சிலர் கூறுவார்கள் நிர்வாணத்திற்குச் சென்று விட்டார். எப்படி புத்தரைக் கூறுகின்றார்கள் சிலர் ஜோதியுடன் ஜோதி கலந்து விட்டதாக கூறுகின்றார்கள் இப்போது சரியானது எது? நிர்வாணத்திற்கு சென்று விட்டார் என்பது சரியானது தான். ஆத்மா கூட நிராகாரமாக இருக்கிறது. நிராகார உலகத்தில் வசிக்கிறது. சூட்சும வதனத்தில் செயல்கள் (மூவி) மட்டும் உள்ளது. அதுவும் கூட அங்குள்ள ஒரு பாஷைபோல் இருக்கிறது, அங்கு அவர்கள் அதனைப் புரிந்துக் கொள்கிறார்கள், புரிந்துக் கொண்டு ஆலோசனை எடுத்து வருகிறார்கள். இதுவும் கூட அதிசயமான விசயமாக உள்ளது அல்லவா? மூவி (அசைவு), டாக்கி (சப்தம்) மேலும் அமைதி மூன்றும் உள்ளது. முதலில் மூவியான திரைப்படம் இருந்தது பிறகு அதனால் யாருக்கும் மகிழ்ச்சி ஏற்படவில்லை என்பதால் பேசும் படமாக்கி விட்டனர். சூட்சும வதனத்தில் வெறும் பிரம்மா, விஷ்ணு, சங்கர் உள்ளனர். புரிய வைக்கப்படுகின்றது. உயர்ந்ததிலும் உயர்ந்தவர் பரமபிதா பரமாத்மா, அவர் சாந்தி தாமத்தில் இருக்கிறார். ஆத்மாக்கள் நாமும் கூட அங்கு வசிக்கின்றோம். பதீத பாவனர் ஒரே ஒரு சத்குரு தான். அனைவருக்கும் சத்கதி வள்ளல் அவர் தான். மற்றபடி யாரும் தன்னை குரு என கூறிக் கொள்ளலாம், ரிஷி என கூறிக்கொள்ளலாம், மகாத்மா என கூறலாம் இருப்பினும் அனைவரும் பக்தர்கள் தான். தூய்மை படுத்துபவரைக் கூட தெரிந்திருக்க வில்லை.

பரமாத்மா அனைவரையும் கல்லறையிலிருந்து வெளியேற்றி அழைத்துச் செல்கிறார் என கூறுகிறார்கள். அதே மகாபாரத மிகப்பெரிய யுத்தத்தை பார்க்கிறீர்கள். நீங்கள் சத்யுகத்திற்காக இராஜயோகத்தை கற்றுக் கொண்டிருக்கிறீர்கள். விநாசத்திற்கு பின்பு மீண்டும் சத்யுகத்தின் கதவு திறக்கிறது. பாபா புரிய வைத்துள்ளார் இந்த சமயம் நீங்கள் பாபாவிடமிருந்து இராஜயோகத்தை கற்றுக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் யோக பலத்தினால் இராஜ்யத்தைப் பெறுகிறீர்கள். இதுவோ அகிம்சையானது. யாருமே தெரிந்து கொள்ளவில்லை. அகிம்சை என எதனை சொல்லப்படுகிறது என்று. காம விகாரத்தில் ஈடுபடாமல் இருக்க வேண்டும். இது கூட ஹிம்சை தான். அகிம்சா பரம தேவி தேவதா தர்மம் இருந்தது. விகாரத்தின் காரணமாகவே நீங்கள் முதல், இடை, கடைசியில் துக்கத்தை அடைந்தீர்கள். அங்கு இருப்பது நிர்விகாரி உலகம், அதன் காரணமாக முதல்-இடை-கடைசியில் துக்கம் ஏற்படுவதில்லை. அது அமரலோகம், இது தான் மரண உலகம். மரண உலகத்தில் அமர்ந்து கதை கூறுகிறார் அமரலோகத்திற்கு செல்வதற்காக. பாபா கூறுகிறார் நான் திரிகாலதரிசியாக இருக்கிறேன், நீங்களும் கூட திரிகாலதரிசி, திரிநேத்திரியாக ஆகிறீர்கள் அதாவது மூன்று உலகத்தை, மூன்று காலத்தை அறிந்தவர்கள். இது பகவானுடைய மகிமையாக உள்ளது. குழந்தைகளான உங்களைக் கூட தனக்கு சமமாக்கி உடன் அழைத்து செல்கிறார். ஞானக்கடலின் குழந்தைகள் நீங்கள் கூட மாஸ்டர் ஞானக்கடல் ஆகிவிடுகிறீர்கள். பாபா கூறுகிறார் நான் மனித சிருஷ்டியின் விதை ரூபமாக, சைத்தன்யமாக, ஞானக்கடலாக இருக்கிறேன்.

ஆம், நாம் தெரிந்து கொள்ள முடியும் விதையிலிருந்து இவ்வாறு மரம் வெளிப்படுகிறது பிறகு பழம் வெளிப்படும். இப்போது இது தான் மனித சிருஷ்டியின் மரம். பாபா கூறுகிறார் நான் இந்த தலைகீழான மரத்தின் ஆரம்பம், இடை, முடிவை சிருஷ்டி சக்கரத்தை அறிந்திருக்கிறேன். மனிதர்கள் கூறுகிறார்கள் பரமாத்மா சத்திய மானவர், சைத்தன்யமானவர், ஆனந்த கடல், சுகத்தின் கடல், ஆகையால் அவரிடமிருந்து அவசியம் ஆஸ்தி கிடைக்க வேண்டுமல்லவா? நீங்கள் உங்களுடைய தந்தையான என்னிடமிருந்து ஆஸ்தியைப் பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் 21 பிறவிக்காக தூய்மையானவர்களாக ஆகிவிடுவீர்கள் நான் எப்பொழுதும் தூய்மையாகவே இருக்கிறேன். நீங்கள் பாகம் ஏற்று நடிக்க வேண்டும். இந்த சமயம் உங்களுக்குத்தான் ஏறும் கலையாக உள்ளது. நீங்கள் மாஸ்டர் ஞானக்கடல் ஆகிவிடுகிறீர்கள். பிறகு சத்யுகத்திலிருந்து உங்களுக்கு கலைகள் குறைந்து கொண்டே போகும். ஏறவும் பிறகு இறங்கவும் வேண்டும். இப்போது குழந்தைகளாகிய நீங்கள் எல்லையற்ற தந்தையிடமிருந்து எல்லையற்ற ஆஸ்தியைப் பெறுகிறீர்கள். நிறைய சேவை செய்கிறீர்கள். பாபா தான் பதீத பாவனர். நீங்கள் சிவசக்தி, பாண்டவ சேனையினர். தூய்மை இல்லாத உலகத்தை தூய்மையான உலகமாக ஆக்குவதில் உதவி செய்கிறீர்கள். உங்களுக்குத் தான் வந்தே மாதரம் என கூறப்படுகிறது. தூய்மை இல்லாத உலகை ஒருபொழுதும் வந்தே மாதரம் என கூறுவதில்லை. பாபா வந்து சக்தி சேனையின் மூலமாக குப்த (ரகசியமான) சேவை செய்விக்கிறார். நீங்கள் இரட்டை அஹிம்சையை கடைபிடிப்பவர்கள். இராஜ்யத்தை பெறுகிறீர்கள். ஆனால் ஆயுதம் எதுவும் இல்லை. தூய்மையாக இருக்கிறீர்கள். அவர்கள் அனைவருமே இரட்டை ஹிம்சர்கள். ஒன்று விகாரத்தில் செல்வது, காம விகாரத்தினால் ஒருவர் மற்றவருக்கு துக்கம் தருகிறார்கள் பிறகு தங்களுக்குள் சண்டை சச்சரவும் செய்துக் கொள்கிறார்கள். இன்றைய நாட்களில் எவ்வளவு துக்கத்தின் மலை விழுகின்றது, மனிதர்களிடம் எவ்வளவு கோபம் நிறைந்திருக்கிறது. தனக்குத் தானாகவே அடித்துக் கொள்கின்றனர். அனைவரையும் நிந்தனை செய்து கொண்டே இருக்கிறார்கள். இதுவும் கூட நாடகத்தில் பதிவாகியுள்ளது. அனைவரும் கீழே இறங்க வேண்டும். இப்போது உங்களுக்குத்தான் ஏறும் கலை. சொர்க்கத்தினைப் படைப்பவர், இராஜயோகத்தினை கற்பிக்கக்கூடியவர் பகவான் வந்திருக்கின்றார் என்று நீங்கள் தண்டோராவை கொட்டுங்கள். அவர் உள்ளங்கையில் சொர்க்கத்தைக் கொண்டு வந்திருக்கின்றார். கிருஷ்ணரை நாம் பகவான் என கூறுவதில்லை. அவர் தெய்வீக குணம் படைத்த மனிதனாக உள்ளார். பிரம்மா, விஷ்ணு, சங்கரை தேவதை என சொல்கின்றோம், அவர்களை தெய்வீக குணம் உடைய மனிதர் என கூறுவதில்லை. தெய்வீக குணம் சத்யுக மனிதர்களிடமே உள்ளது, அசுர குணம் கலியுக மனிதர்களிடம் உள்ளது. தெய்வீக குணவான் மேலும் அசுர குணவான் இப்படி மனிதர்களே ஆகின்றனர். ஆகையால் பாபா வந்து புரிய வைக்கின்றார் - நீங்கள் பாபாவை ஏன் மறந்து விடு கின்றீர்கள்? அடிக்கடி என்னை நினைவு செய்யுங்கள். உங்களுடைய 84 பிறவி முடிவடைந்து விட்டது, இப்போது நான் உங்களுக்கு இராஜயோகத்தைக் கற்பிக்க வந்திருக்கிறேன். பிறகும் கூட நீங்கள் அடிக்கடி மறந்து விடுகின்றீர்கள். தேக அபிமானத்தை விட்டு தன்னை அசரீரியாகப் புரிந்து கொள்ளுங்கள். நல்லது.

இனிமையிலும், இனிமையான வெகுகாலம் கழித்து காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு தாய், தந்தையான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை

வணக்கங்களும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கியமான சாரம்:-

(1) பாபாவிற்கு சமமாக திரிகாலதரிசி, திரிநேத்திரி, திரிலோக நாதன் ஆக வேண்டும். பாபாவின் மகிமையில் தன்னையும் கூட மாஸ்டர் ஆக்கிக் கொள்ள வேண்டும்.

(2)

(2) இரட்டை அஹிம்சாவாதிகளாக ஆக வேண்டும். எந்த ஒரு விகாரத்திற்கும் வசமாகி ஹிம்சை செய்யக் கூடாது. தந்தையின் உதவியாளர் ஆகி அனைவரையும் தூய்மை ஆக்கும் சேவை செய்ய வேண்டும்.

வரதானம் : ஜுவாலா ரூபத்தின்ன் நினைவு மூலம் தன்னை மாற்றம் செய்து பிராமண நிலையிலிருந்து, ஃபரிஸ்தா, மற்றும் தேவதை ஆகுக.

எப்படி நெருப்பில் ஏதாவதொரு பொருளை போட்டால், அதனுடைய பெயர், ரூபம், குணம், அனைத்தும் மாறிவிடும். அதுபோல பாபாவின் நினைவின் ஈடுபாடு என்ற நெருப்பில் மூழ்குகிறீர்கள் என்றால் மாற்றம் ஏற்பட்டு விடும். மனித நிலையிலிருந்து பிராமணன், அதன் பிறகு பிராமண நிலையிலிருந்து ஃபரிஸ்தா, இதிலிருந்து தேவதை ஆகிறீர்கள். அதுபோல சாதாரண மணலை அச்சில் வைத்து நெருப்பில் (சூலையில்) போட்டால் செங்கள் ஆகிவிடுகிறது, அதுபோல இதுவும் கூட மாற்றம் ஆகிவிடும். ஆகையால் நினைவை ஜுவாலா ரூபம் என்று சொல்லப்படுகிறது.

சுலோகன்: சக்திசாலியான ஆத்மா யாரென்றால் தேவையான நேரத்தில் குளுமையாகவும் தேவைப்படும் பொழுதும் ஜுவால ரூபத்தை தாரணை செய்யுங்கள்.